# நல்வினைப் பயன்

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# நல்வினைப் பயன்

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | நல்வினை | 1 |
| 2. | காந்தியின் கதை | 2 |
| 3. | புத்தர் காலத்தில் ஒரு ஏழையின் கதை | 6 |
| 4. | அறநெறியில் ஒழுகி வாழ்ந்த இல்லறவாசி | 13 |
| 5. | காந்தியடிகளின் கதை | 15 |
| 6. | குரு நானக் கதை | 18 |
| 7. | சீத பேதியினால் துன்புற்ற துறவி | 25 |
| 8. | அனாத பிண்டகர் | 29 |

# நல்வினைப் பயன்

(ஜொகூர் சாஆ தர்மா மண்டபத்தில் துறவி அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு)

**ந**ல்வினை என்பது, நற்செயல்கள். நாம் நம் நலனை நவிரும்புவதுபோல் பிறர் நலனை உள்ளத்தில் விரும்பி, அவர்களுக்கு நன்மைகள் செய்தோமென்றால், நாம் நற்செயல்கள் செய்கிறோம். எந்த ஒரு செயல், அதைச் செய்வதால், தனக்கோ, அல்லது பிறருக்கோ, அல்லது இருவருக்குமே துன்பம் வருமாயின், அச்செயல் நற்செயல் இல்லை. எந்த ஒரு செயல், அதைச் செய்வதால், பிறருக்கும், தனக்கும் நன்மை வருமோ, அது நற்செயல். எந்தச் செயல், செய்தபின், அதை நினைத்து மனம் வருந்துமோ, எதன் பிற்பயனை அழுது கொண்டே அனுபவிக்க வேண்டியிருமக்குமோ, அது நற்செயல் ஆகாது. எந்தச் செயல், செய்தபின், அதை நினைத்து மனம் மகிழுமோ, எதன் பிற்பயனை இன்பமுற்று அனுபவிக்க வேண்டியிருக்குமோ, அது நற்செயல். ஆகவே, நற்செயல் என்பது, தன் நலனை விரும்புவது போல், பிறர் நலனையும் உள்ளத்தில் விரும்பி, தனக்கும் பிறருக்கும் நன்மைகள் தரும் செயல்களைச் செய்வதாகும்.

ஒரு கிராமத்தில் ஒரு கிழவர் தென்னம் பிள்ளைகளுக்கு நீர் ஊற்றிக்கொண்டிருந்தார். அவ்வழியே சென்ற ஒரு வழிப்போக்கர், தாகமாக இருக்கவே, கிழவரிடம் சென்று தண்ணீர் கேட்டார். கிழவரும் கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொடுத்தார்.

"ஐயா பெரியவரே! இந்தத் தள்ளாத வயதில் இப்படிக் கஷ்டப்பட்டுத் தென்னைக்குத் தண்ணீர் வார்க்கிறீரே! இதன் பயனை நீர் அனுபவிக்கப் போகிறீரா? ஏன் வீணாகப் பாடுபடுகிறீர்?" என்று வழிப்போக்கர் கேட்டார்.

கிழவர் அருகிலிருந்த உயர்ந்த தென்னை மரத்தைச் சுட்டிக்காட்டி "இதோ நெடிதாக வளர்ந்துள்ள இந்த மரம் என் தாத்தா

வைத்ததாம்," இன்னும் ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டி, "இந்த மரம் என் தந்தை பயிர் செய்த மரம். இந்த மரங்களின் பலனை நான் அனுபவிக்கிறேன். அது போலவே நானும் ஒன்றிரண்டு தென்னம் பிள்ளைகள் வைத்தால் அவை என் பேரப் பிள்ளைகளுக்குப் பயன்படுமே," என்றார்.

"அதை நீர் காண முடியாதே" என்றார் வழிப்போக்கர். "தாம் காண வேண்டும் என்று எண்ணியிருந்தால் என் தாத்தா தென்னம் பிள்ளையை வைத்திருக்க மாட்டார். நானும் பயன் அனுபவித்திருக்க முடியாது. எந்தச் செயலையும் தன் நலத்தை மட்டும் கருதிச் செய்யக்கூடாதல்லவா?" என்றார் கிழவர்.

நாம் ஒவ்வொருவரும் பிறர் செய்த நற்செயல்களால் பலவகைகளில் நன்மைகள் அடைகின்றோம். நீங்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பாருங்கள். பிறர் செய்த நற்செயல்களால் நீங்கள் அடைந்திருக்கும் நன்மைகளை. பெற்றோர், ஆசிரியர், மதகுருக்கள், நண்பர்கள், உறவினர்கள் தொண்டு செய்வோர், அரசாங்கத்தினர், அறிமுகமில்லாதவர்கள் என பிறர் செய்த நற்செயல்களால் நாம் பல நன்மைகள் பெற்றிருக்கிறோம். பிறர் செய்த நற்செயல்களால் பயனடைந்த நாம், கிழவர் கூறியதுபோல், நம் வாழ்நாளில் பிறர் நலம் கருதி நற்செயல்கள் செய்வதை ஒரு நல்ல ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும்.

காந்திஜி, தன் சட்டக் கல்வியை லண்டனில் முடித்ததும், இந்தியா திரும்பினார். பிறகு தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று, அங்கு ஒரு நிருவனத்தில் வக்கீலாக பணி புரிந்தார். அவர், தென்னாப்பிரிக்காவில் வக்கீலாக இருக்கும்போது, ஒரு முஸ்லீம் சமையற்காரர் காந்திஜியிடம் வந்து கூறினார். "காந்திபாய், எனக்கு மிகக் குறைந்த வருமானமே கிடைக்கிறது. குழந்தைக் குட்டிக்காரன். இந்தக் குறைந்த வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்த முடிவதில்லை. எனக்கு மட்டும் கொஞ்சம் ஆங்கிலம் தெரியுமானால் அதிக வருமானம் கிடைக்கும்."

காந்திஜி அப்போது வக்கீல் அவர் சற்று நேரம் யோசித்து, மனதிற்குள்ளேயே உறுதிப் படுத்திக்கொண்டு சொன்னார்: "நல்லது, நானே உமக்கு ஆங்கிலம் கற்பிக்கிறேன்".

சமையற்காரர் ஆச்சரியத்துடன் நோக்கினார். மேற்கத்திய முறையில் வாழும் இந்த வக்கீலா எனக்கு ஆங்கிலம் கற்பிக்கப் போகிறார். அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் அவருக்கு ஒரு பிரச்சனைக் குறுக்கிட்டது. அவர் அதையும் காந்திஜியிடம் கூறினார், " தாங்கள் எனக்கு கற்பிப்பீர்கள், அது சரிதான். ஆனால் வேலையை முடித்துவிட்டு நான் இங்கு சீக்கிரம் எப்படி வரமுடியும்?"

காந்திஜி உடனே பதிலளித்தார்: “இதைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். நான் உம் வீட்டிற்கே வந்து பாடம் கற்பிக்கிறேன்."

சமையற்காரரின் கண்கள் நன்றியுணர்வினால் பணித்தன. வக்கீல் காந்தி ஒவ்வொரு நாளும் கால் நடையாகவே நான்கு மைல் நடந்து சென்று அவருக்குப் பாடம் கற்பித்துவிட்டுக் கால் நடையாகவே திரும்பி வருவது வழக்கம். இம்மாதிரி ஓரிரு நாட்களல்ல, எட்டு மாதங்கள் இவ்வாறு செய்து வந்தார்.

நல்வினைப்பயன் என்பது, நற்செயல்களால் விளையும் பலன்கள். நற்செயல்கள் பிறருக்கு நன்மை செய்வதோடு மட்டுமின்றி, அச்செயலைச் செய்தவருக்கும் பிற்பயன் நன்மை தரும். நற்செயல்களைச் செய்தவருக்கு, அவர் செய்த நற்செயல்களால் வரும் நன்மையே புண்ணியம். ஆகவே, புண்ணியம் என்பது, பிறர் நலம் கருதி நற்செயல்கள் செய்பவருக்கு வரும் நன்மைகள். நற்செயல்கள் பிறருக்கும் நன்மை தந்து, அச்செயல்களைச் செய்பவருக்கும் நன்மை தருவதால், நற்செயல்களைச் செய்வது நல்லது.

பகவான் புத்தர், நற்செயல் எது என்பதை இவ்வாறு கூறியுள்ளார்.

***“எந்தக் கருமத்தைச் செய்தால் பின்னால் மனம் நோகுமோ, எதன் பயனை அழுது கொண்டே அனுபவிக்க வேண்டியிருக்குமோ, அது நற்செயல் ஆகாது.***

***"எந்தக் காரியத்தைச் செய்தால் மனம் பின்னால் இன்பம் அடையுமோ, எதன் பயனை உள்ளக் களிப்போடு அனுபவிக்க வேண்டியிருக்குமோ, அதுவே நற்செயல்.”***

***"தீய வினையைச் செய்யாது விடுதலே நலம்; ஏனெனில் தீவினை பின்னால் துன்பத்தை அளிக்கின்றது. நல்வினைப் புரிவதே நலமாகும்; அதனால் பின்னால் வருந்த நேராது."***

குற்றச் செயல் செய்தபின், அதை நினைக்கும் போதெல்லாம் வேதனை உள்ளத்தை வறுத்தும். குற்றச் செயல்கள் செய்தவரை, அவர் உள்ளமே அவரை உறுத்தும். ஆனால் நற்செயல்களோ, அவற்றை நினைக்கும் போதெல்லாம் உள்ளம் மகிழும். குற்றச் செயல்கள் பழியையும், பாவத்தையும் தரும். அதன் பிற்பயனை அழுது கொண்டே அனுபவிக்க வேண்டும். ஆனால் நற்செயல்களோ, புகழையும், புண்ணியத்தையும் தரும். அதன் பிற்பயனை இன்பத்துடன், மகிழ்ச்சியுடன் அனுபவிக்கலாம்.

உதாரணத்திற்கு, தானம் என்னும் நற்செயலை எடுத்துக் கொள்வோம். தானம் என்பது, பிறர் துயரத்தைக் கண்டு, உள்ளத்தில் இரக்கங் கொண்டு, பொருளோ, சேவையோ, அடைக்கலமோ தந்து ஆதரவு காட்டுவது. சிலர் பொருளைக் கொடுத்து பிறர் துன்பத்தைக் களைவார்கள். வேறு சிலர், சேவை செய்து பிறர் துயரத்தைப் போக்குவார்கள். மற்றும் சிலர் அன்பு காட்டி, அடைக்கலம் கொடுத்துப் பிறர் துயரைத் துடைப்பார்கள்.

தானம் எனும் நற்செயல், பசித்திருப்போரின் பசியைப் போக்கும்: ஏழைகளின் வறுமையை நீக்கும்; அனாதைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் ஆதரவு அளிக்கும்; வாழ்வில் துன்பமுற்று வருந்துவோரின் துன்பக் கண்ணீரைத் துடைக்கும், துறவு பூண்டோருக்குச் சேவை செய்யும்; வியாதியினாலும், அங்கவீனத்தாலும் துன்பப்படுவோருக்கு அன்பும் மருந்தும், சேவையும் தரும்; கல்வியும் ஒழுக்கமும் இல்லாதோருக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் கற்றுத் தரும்; அறமும், பக்கியும் இல்லாதோருக்கு, அறத்தையும் பக்தியையும் கற்றுத் தரும் மற்றும், பிறர் நலம் கருதி, சேவைகள் செய்து, மக்கள் மத்தியில் மாறுதல்களையும், நன்மைகளையும் கொண்டு வரும்.

தானம் எனும் நற்செயல், பிறர் துன்பம் போக்கி, அவர்களுக்கு நன்மையைத் தருகிறது. அதோடு நின்று விடாமல் அச்செயலைச் செய்பவருக்கும் நற்பயன்கள் சேர்க்கின்றது. எவ்வாறு நற்பயன்கள்

சேர்க்கின்றது? உதவி பெற்றோர் நற்செயல்கள் செய்தோரை நன்றியுடன் வாழ்த்துவார்கள். இவர்கள் செய்யும் நற்செயல்களைக் கண்டு, மக்கள் இவர்களைப் புகழ்வார்கள். நல்லோர் இவர்கள் நட்பை விரும்பி, இவர் வழி நடப்பார்கள். தான் செய்த நற்செயல்களை நினைக்குந்தோறும் இவர் உள்ளம் மகிழும். இவர் செய்த நற்செயல்கள் அடுத்த உலகிற்கும் புண்ணியப் பலனைத் தரும்.

பகவான் புத்தர், "தீய செயல்களைச் செய்தோர், இங்கும் துன்பப்படுவார்கள். அடுத்த உலகிலும் துன்பமடைவார்கள் என்றும், நற்செயல்களைச் செய்தோர், இங்கும் இன்புற்று, அடுத்த உலகிலும் இன்புறுவார்கள்," என்றும் கூறுகின்றார்.

***“தீயச் செயல்கள் செய்தவன் உலக வாழ்வில் வருந்துகிறான்: அடுத்த உலகிலும் துன்பம் அடைகிறான்; இரண்டு உலகிலும் அவனுக்குத் துயரமே. தான் செய்த தீயக் கருமத்தின் விளைவைக் கண்டு இவன் வருந்திப் புலம்புகிறான்.”***

***"நற்செயல்கள் செய்தவன் இவ்வுலக வாழ்வில் இன்பமடைகிறான், அடுத்த உலக வாழ்விலும் இன்புமுறுகிறான். இரண்டு உலகிலும் அவனுக்கு இன்பமே. தான் செய்த நற்கருமத்தின் விளைவுகளைக் கண்டு அவன் மகிழ்ந்து இன்பமடைகிறான்.”***

தீயச் செயல்கள் ஈருலகத்திலும் துன்பம் பயப்பதால் தீயனவற்றைக் கண்டு அஞ்ச வேண்டும். நற்செயல்கள் ஈருலகத்திலும் நன்மை தருவதால், நற்செயல்களை விரும்பிச் செய்ய வேண்டும்.

பகவான் புத்தர், "அறநெறியில் நின்று செய்யும் நற்செயல்களே பெரும் புண்ணியப் பலனைத் தரும்" என்று கூறுகின்றார்."அற நெறியில் நின்று" என்பது உள்ளத்தால் தீமையை எண்ணாமை, வாயால் தீமையைச் சொல்லாமை, உடலால் தீமையைச் செய்யாமை என்பவையாகும். பிறர் நமக்குத் தீமை செய்வதை நாம் விரும்புவதில்லை. அதுபோல் நாமும் பிறருக்கு மனதாலும், சொல்லாலும், உடலாலும்

தீமைகளைச் செய்யாமல், நல்லனவற்றையே செய்தோமென்றால், நாம் அறநெறியில் நிற்கிறோம்! அறவழியில் நடக்கிறோம்! அறநெறியில் ஒழுகுகிறோம்", "அறம் அறிந்து நல்வழியில் நடக்கிறோம்." என்று கொள்ளப்படும். அறம் அறிந்து, நல்வழியில் பொருள் தேடி, பிறர் நலம் கருதி தானம் செய்வதும், அறம் அறிந்து நல்வழி நடந்து பிறர் நலம் கருதி செய்யும் சேவையும், அறவழியில் நின்று செய்யும் நற்செயல்களும், இவையே பெரும் புண்ணிய பலனைத் தரும் எனக் கூறுகின்றார் பகவான் புத்தர்.

அறத்தை அழித்து, தவறான வழியில் பிறரை வருத்தி, பிறர் அழ அழ பொருள் தேடி, பின் ஆயிரம், ஆயிரமாகக் கொடுப்பதும் தானம். அறம் அறிந்து நற்பண்புகளுடன் இல்லறம் நடத்தும் ஓர் ஏழை, நல்வழியில் பொருள்தேடி, அதன் ஒரு சிறு பகுதியைக் கொடுப்பதும் தானம்தான். தவறஅன வழியில் பொருள் தேடியவர் கொடுக்கும் ஆயிரம், ஆயிரம் தானத்திற்கு முன், நல்வழியில் பொருள் தேடிய ஏழை கொடுக்கும் தானம் அளவில் மிகச் சிறியதுதான். ஆனால், நல்வழியில் பொருள் தேடிய ஏழை கொடுக்கும் சிறு தானத்திற்கு ஈடாகாது, தவறான வழியில் பொருள் தேடி, பின் ஆயிரம் ஆயிரமாகக் கொடுப்போனின் தானம் என்று கூறுகின்றார் பகவான் புத்தர்.

ஏன்? தவறான வழியில் பொருள் தேடியோர் கொடுக்கும் ஆயிரம் ஆயிரம் தானம், பிறரை வருத்தித் தேடிய பொருள், பிறருக்குத் துன்பம் கொடுத்து தேடிய பொருள். நலவழியில் பொருள் தேடி அதில் ஒரு சிறு பகுதியைத் தானமாகக் கொடுக்கும் ஏழை, பிறரை வறுத்தாமல், அறம் அறிந்து தேடிய பொருள். பிறருக்குத் துன்பம் தந்து பொருள் தேடி, பிறகு பிறருக்குக் கொடுத்துத் துன்பம் போக்கும் தானம் அளவில் பெரிதேயாயினும், துன்பம் கொடுக்காமல் பொருள் தேடி பிறகு பிறருக்குக் கொடுத்து துன்பத்தைப் போக்கும் தானம் அளவில் சிறிதேயாயினும், இதுவே, மிகப் பெரிய புண்ணியப் பலனைத் தரும்7என்கிறார் பகவான் புத்தர்.

இதை விளக்குவதற்காக பகவான் புத்தர் இக்கதையைக் கூறுகின்றார்.

பல ஆண்டுகளுக்கு முன் இராஜகிரம் என்ற பட்டினத்தில் ஓர் ஏழை வாழ்ந்து வந்தார். அவர் ஏழையானதால் அவரை எவரும் ஒரு பொருட்டாக கருதுவதில்லை. அவர் ஏழையாக இருந்த போதிலும் அறம் அறிந்து வாழ்ந்தார். பெரியோர்கள் கூறிய அறவழி நடந்து, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்து, தன் சக்திற்கேற்ற தானம் செய்து வாழ்ந்தார்.

உடலை விட்டு உயிர் பிரிந்த பின் அவர் தேவலோகத்தில் தேவக்குமாரனாகப் பிறந்தார். மற்ற தேவக்குமாரர்களைவிட அழகாகவும், தெய்வீக ஒளியுடனும் திகழ்ந்தார். இவருடைய அழகையும், தெய்வீக ஒளியையும் கண்டு, மற்ற தேவக்குமாரர்கள் அதிசயித்தார்கள். சிலர், "இவனோ மனித உலகில் ஓர் ஏழையாக வாழ்ந்தான். அங்கு மனிதர்கள் இவனை ஒரு பொருட்டாகக் கூட கருதவில்லை. இங்கு நம்மிலும் அழகாகவும், தெய்வீக ஒளியோடும் திகழ்கிறானே" என்று அதிருப்தியடைந்தார்கள்.

இதைக் கண்ட தேவேந்திரன் அவர்களிடம், "இந்த தேவக்குமாரனின் அழகையும், தெய்வீக ஒளியையும் கண்டு நீங்கள் அதிருப்தி அடைய வேண்டாம். இவர் மனிதனாக வாழ்ந்த போது, ஏழையாக இருந்த போதிலும், பெரியோர்கள் கூறிய அறவழி நடந்து, நற்பண்புகளுடன், நற்செயல்கள் செய்து, தன் சக்திக்கேற்ற தானம் செய்து வாழ்ந்து வந்தார். அதன் புண்ணியபலன் அவர் உங்களைவிட அழகாகவும், தெய்வீக ஒளியோடும் திகழ்கிறார்." என்று கூறினார்.

அறவழி நடந்து, தானம் செய்த ஏழைக்கு இது புண்ணியம் என்றால், அறம் அறிந்து நல்வழியில் பொருள் தேடிபின் ஆயிரம் ஆயிரமாகத் தானம் செய்வோரின் புண்ணியத்தையும், அறத்தில் நின்று, பிறர் நலம் பேணி சேவை செய்வோரின் புண்ணியத்தையும், அறத்தில் நின்று நற்செயல்கள் செய்வோரின் புண்ணியத்தையும் கூறவும் வேண்டுமோ?

வாயினால் தீமைகளைச் சொல்லாது வாழ்தலும், உடலால் தீமைகளைச் செய்யாது வாழ்தலும், உள்ளத்தால் தீமைகளை எண்ணாது வாழ்தலும் ஆகிய இம்மூன்றும் உயர்ந்தோரது பண்பாகும். இதுவே, அறம் அறிந்து நல்வழி நடப்பதாகும். அறம் அறிந்து நல்வழியில் தேடிய பொருளை, துன்பமுற்றோருக்குக் கொடுத்து அவர்களது துயரத்தைத் துடைப்பதும், அறம் அறிந்து, நல்வழி நடந்து நற்செயல்கள் செய்வதும், அறம் அறிந்து நல்வழி நடந்து தமக்குத் தீங்கிழைத்தோருக்கும் நன்மையே செய்வதும், இவையே நற்செயல்களில் தலையானவை. இவற்றைவிட உயிருக்குச் சிறந்த ஊதியம் வேறில்லை.

இதையே திருவள்ளுவர் இவ்வாறு கூறுகின்றார்.

***ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது<br>ஊதியம் இல்லை உயிர்க்கு.***

ஈதல் என்பது தானம். தானம் என்பது மேற்சொன்ன நற்செயல்கள் செய்து, பிறர் துன்பம் போக்குவது. தானம் செய்து புகழோடு வாழ வேண்டும் என்று கூறி, இதைவிட சிறந்த ஊதியம் உயிருக்கு வேறொன்றுமில்லை என்கிறார் திருவள்ளுவர். அதாவது, அறம் அறிந்து நல்வழி நடந்து, நற்செயல்கள் செய்து வாழ்வோருக்கு புகழும் புண்ணியமும் வருமென்றும், இதைவிட சிறந்த ஊதியம் இந்தக் குறுகிய மனித வாழ்வில் உயிருக்கு வேறொன்றில்லை என்கிறார் திருவள்ளுவர். பகவான் புத்தர் அறம் அறிந்து நல்வழி நடந்து, நற்செயல்கள் செய்து, வாழ்வோர் ஈருலகிலும் இன்புறுவார்கள் என்கிறார்.

***“அறநெறியில் வழக்கமாக ஒழுகி வருவோரைக் கண்டேன். இவர்கள் பெரியோர்களை இகழ்வதில்லை. மனதில் சரியான கருத்தைக் கொண்டு அறவழியில் நின்று நற்செயல்கள் செய்து வாழ்வதைக் கண்டேன். உடலை விட்டு உயிர் பிரிந்தபின், இவர்கள் தெய்வலோகத்தில் பிறந்து இன்புறுவதைக் கண்டேன். இதை மற்றவர்கள் சொல்லக் கேட்டு நான் உங்களுக்குச் சொல்லவில்லை. நானே நேரில் பார்த்து உங்களுக்குச் சொல்கின்றேன்”*** என்றார் பகவான் புத்தர்.

அறநெறியில் நின்று வாழ்வோர் இவ்வுலகில் உண்டா என்று சிலர் சந்தேகப்படலாம். அதற்குப் பகவான் புத்தர், அறநெறி அறிந்து, நல்வழி நடப்போர் இவ்வுலகில் உண்டு என்று கூறுகின்றார். அதனைத்தான், 'அறநெறியில் ஒழுகி வாழ்வோரைக் கண்டேன்" என்கிறார்.

இவர்கள் பெரியோர்களை இகழ்வதில்லை. அதாவது, நல்வழியில் நடக்கும் இவர்கள். இவ்வுலகிற்கு இறைவன் அருளால் அறத்தை உபதேசம் செய்த பெரியோர்களையும், அவர்கள் காட்டிய அறவழியையும் இகழ்வதில்லை. இவர்கள் பெரியோர்களைப் போற்றி, அவர்கள் கூறிய அறவழியில் நடப்பார்கள்.

இவர்களிடம் சரியான கருத்து இருக்கும். அதாவது, செயல்களுக்குப் பலன் உண்டு. தீய செயல்களுக்கும் நற்செயல்களுக்கும் பலன் உண்டு, அடுத்த உலகம் உண்டு தெய்வலோகம் உண்டு. மோட்சம் உண்டு போன்ற சரியான கருத்துகள் இவர்களிடம் இருக்கும்.

இவர்களிடம் அறமும், சரியான கருத்தும் இருப்பதால், தீமையைக் கண்டு அஞ்சுவார்கள். பழிக்கும், பாவத்திற்கும் அஞ்சுவார்கள். இவர்களிடம் நல்லனவற்றை அறியும் ஆற்றலும், நல்வழியில் நடப்பதற்கு மன உறுதியும் இருக்கும். அறவழி நடந்து, நற்செயல்கள் செய்து, நற்பண்புகளுடன் வாழ்வார்கள்.

அடுத்த உலகம் உண்டா? அறநெறியில் ஒழுகி, நற்செயல்கள் செய்தோர், உடலை விட்டு உயிர் பிரிந்தபின் தெய்வலோகத்தில் பிறந்து இன்புறுவதைக் கண்டோர் உடண்டா என்று சிலர் கேட்கலாம். உண்டு என்கிறார் பகவான் புத்தர்,

பெரியோர்களைப் போற்றி, அறவழியில் நடந்து, நற்செயல்கள் செய்து வாழ்ந்தோர், "உடலை விட்டு உயிர் பிரிந்தபின் தெய்வலோகத்தில் பிறந்து இன்புறுவதைக் கண்டேன்" என்கிறார் பகவான் புத்தர்,

நாம் ஒன்றை இங்கு ஞாபகத்தில் கொள்ள வேண்டும். பகவான் புத்தர் சாதாரண மனிதர்களுக்கு இல்லாத பூரண ஞான அறிவும், தெய்வீகப் பார்வையும் தனக்கு உண்டென்றும்,

பாவங்கள் செய்தோர் இறந்தபின் துன்பப் பிறப்பினுள் வீழ்ந்து துன்பப்படுவதையும், நன்னெறியில் நடந்து, நற்செயல்கள் செய்தோர் இறந்தபின் தெய்வலோகத்தில் இன்புறுவதையும் பகவான் புத்தர் தன் தெய்வீகப் பார்வையால் பார்க்க முடியும் என்கிறார் .

அறவழி நடந்து, நற்செயல்கள் செய்து வாழ்வோரின் இந்தப் புண்ணிய பலனை, தான் பிறர் சொல்லக் கேட்டுச்சொல்லவில்லை என்றும், தானே தன் தெய்வீகப் பார்வையால் பார்த்துச் சொல்கிறேன் என்றும் இவ்வுலகிற்குக் கூறுகிறார்.

உள்ளத்தில் பக்தி கொண்டு, அறநெறியில் ஒழுகி, நற்செயல்கள் செய்வோர் இறந்தபின், "வாருங்கள் தெய்வலோகத்திற்கு" என்று தேவக்குமாரர்கள் இவர்களை தெய்வலோகத்திற்கு அழைப்பார்கள் என்கிறார் பகவான் புத்தர்.

பகவான் புத்தர் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் சவத்தி என்றொரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்தில் ஒருவர் இல்லற வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவருக்குப் பதினான்கு பிள்ளைகள் இருந்தனர். அவரும், அவர் மனைவியும், மற்றும் பிள்ளைகளும் பகவான் புத்தரிடம் மிகவும் பக்தி கொண்டிருந்தனர். புத்தர் கூறிய அறநெறியில் ஒழுகி, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்து வாழ்ந்து வந்தார்கள். சில காலஞ்சென்று, அந்த இல்லறத்தார் நோய்வாய்ப்பட்டார். தாம் இறக்கப் போகிறோம் என அறிந்த அவர், தன் பிள்ளைகளிடம் "போய் பகவான் புத்தரின் சிஷ்யர்கள் சிலரை அழைத்து வாருங்கள். அவர்கள் எனக்கு தர்மத்தை உபதேசம் செய்வார்கள். நான் தர்ம உபதேசம் கேட்டுக் கொண்டே இறக்க விரும்புகிறேன்" என்று கூறினார்.

அவர் விருப்பப்படி, சிஷ்யர்களில் சிலர் வந்து அவர் அருகில் அமர்ந்து தர்மத்தை உபதேசம் செய்தார்கள். அப்போது வானத்தில் ஒரு இரதம் தோன்றியது. அதிலுள்ள தேவக்குமாரர்கள் இவரிடம் "நாங்கள் உங்களை தெய்வலோகத்திற்கு அழைத்துச் செல்ல வந்துள்ளோம். வாருங்கள் தெய்வலோகத்திற்கு," என்று அழைத்தனர்.

"கொஞ்சம் பொறுங்கள், தர்ம உபதேசம் முடிந்ததும் வருகிறேன்" என்று இவர், அவர்களிடம் கூறினார்.

அங்குள்ள மற்றவர் எவருக்கும் இரதமும், தேவக்குமாரர்களும் தென்படவில்லை. அங்குள்ள மற்றவர் எவருக்கும் போதுமான புண்ணிய பலன் இல்லாததால், அவர்களால் இரதத்தையும், தேவக்குமாரர்களையும் பார்க்க முடியவில்லை. மனைவியும், பிள்ளைகளும் "இவருக்கு மரண பயம் வந்து விட்டது, பிதற்றுகிறார்" என நினைத்து அழ ஆரம்பித்தனர். இதனைக் கண்ட அவர் "ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர்கள் "யாருக்குத்தான் மரண பயம் வராது. மரண பயத்தால் நீங்கள் பிதற்றுவதைப் பார்த்து அழுகிறோம்" என்று கூறினர். அதற்கு அவர், "எனக்கு மரண பயம் இல்லை. நான் பிதற்றவும் இல்லை. என்னை தெய்வலோகத்திற்கு அழைத்துச் செல்ல வானத்தில் தேவக்குமாரர்கள் காத்திருக்கிறார்கள். உங்களுக்குப் போதுமான புண்ணிய பலன் இல்லாததால், உங்களால் அவர்களைக் காண முடியவில்லை. வீட்டில் பூமாலை இருக்கிறதா?" என்று வினவினார். அங்குள்ளவர்களும் உண்டு என்று கூறினர். அவர் "வானத்தில் நிற்கும் இரதத்திற்கு இந்தப் பூமாலை சென்றடைய வேண்டும் எனக் கூறி இந்தப் பூமாலையை ஆகாயத்தில் வீசுங்கள்" என்று அவர்களிடம் கூறினார்.

அங்குள்ளவர்களும் அவர் கூறியபடியே செய்தனர். பூமாலை வானத்தில் நிற்கும் இரதத்தில் மாட்டித் தொங்கியது.

அவர், "வானத்தில் நிற்கும் இரதத்தில் மாட்டித் தொங்கும் மாலையைப் பாருங்கள். இரதத்தையும் தேவக்குமாரர்களையும் நீங்கள் பார்க்க முடியாது. நான் பிதற்றவில்லை. எனக்கு மரண பயமும் இல்லை. நான் தெய்வலோகம் செல்கிறேன். நீங்கள் தெய்வலோகத்தில் பிறக்க விரும்பினால் என்னைப்போல் அறநெறியில் ஒழுகி, நற்செயல்கள் செய்யுங்கள்," எனக்கூறி உடலை விட்டு உயிர் பிரிந்தபின், தெய்வலோகத்திற்குச் சென்றார்.

சிஷ்யர்கள் புத்தரிடம் சென்று நடந்தவற்றைக் கூறினர். பகவான் புத்தர் அவர்களிடம்,

**'நற்கருமத்தைச் செய்தவன் உலக வாழ்வில் இன்பமடைகிறான். அடுத்த உலகிலும் அவன் இன்பமடைகிறான். ஈருலகிலும் அவன் இன்பத்தையே 8நுகர்கிறான். "நான் செய்த புண்ணியம்" என்று இவன் இன்பமடைகிறான்,"** என்று கூறினார்.

தானத்தில் சிறந்த தானம், நற்செயல்களில் சிறந்த நற்செயல், அன்பில் சிறந்த அன்பு எதுவென்றால், அறம் அறியாமல் வாழ்வோருக்கு மீண்டும் மீண்டும் அறத்தை உபதேசம் செய்து, அவர்களையும் அறநெறியில் ஒழுகச் செய்வதும்; பக்தியில்லாமல் வாழ்வோருக்கு மீண்டும் மீண்டும் பக்தியை உபதேசம் செய்து அவர்கள் உள்ளத்தில் பக்தியைப் பதிய வைப்பதும்; அறிவும் ஒழுக்கமும் இல்லாதோருக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் கற்றுத் தருவதும்; அருள் இல்லாதோருக்கு அருளை உபதேசம் செய்வதும்; இதுவே தானத்தில் சிறந்த தானம், நற்செயல்களில் சிறந்த நற்செயல், அன்பில் சிறந்த அன்பு, என்று பகவான் புத்தர் கூறியுள்ளார்.

இவ்வுலகில் அறம் அறியாத மக்கள் பலர் உள்ளனர். அறம் அறியாத மக்களின் பக்தியும், முறையான பக்தி ஆகாது. ஏன்? அறமில்லாமல், பக்தியில்லை. அறநெறியில் ஒழுகுவோரிடம்தான் முறையான பக்தி இருக்கும். ஆகவே, அறத்தில் ஒழுகி, உள்ளத்தில் பக்தி கொண்டு வாழ்வோர், அறம் அறியாதோருக்கு, தான் கற்றறிந்த அறத்தை அவர்களுக்கும் எடுத்துக் கூற வேண்டும். இது நற்செயல்களில் சிறந்த நற்செயல். பகவான் புத்தர் இதனையே இவ்வாறு கூறுகின்றார்:

***"சகல தானங்களையும் தரும தானமே வெல்கிறது."***

(அதாவது, பிறருக்குத் தரும உபதேசம் செய்வது, தானங்களில் சிறந்த தானம்.)

திருவள்ளுவரும் அதையே இவ்வாறு கூறுகின்றார்:

***ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை***
***நோற்பாரின் நோன்மை உடைத்து***

இல்லற வாழ்க்கை வாழும் ஒருவர், தானும் அறநெறியில் ஒழுகி, பிறருக்கும் அறத்தை உபதேசம் செய்து, அவர்களும் நல்வழியில் நடப்பதற்குத் துணை நின்று வாழ்ந்தாரென்றால், இவரின் இல்லற வாழ்க்கை தவ வலிமை உடையதாக இருக்கும். எப்படி தவ வலிமை உடையது? அறநெறி அறிந்து வாழ்ந்து தவம் செய்யும் ஒரு துறவியின் தவத்தைப்போல், இவரது இல்லற வாழ்க்கை தவ வலிமை உடையதாக இருக்கும் என்று கூறிய திருவள்ளுவர், தானும் அறத்தில் நின்று, மற்றவர்களையும் அறவழியில் ஒழுகச் செய்யும் நற்செயலின் சிறப்பை விளக்குகின்றார்.

மேற் சொன்னவைபோல் வாழ்பவரை, மக்கள் புகழ்ந்து உரைப்பார்கள் என்கிறார் திருவள்ளுவர். எப்படி புகழ்வார்கள்?

***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்***
***தெய்வத்துள் வைக்கப் படும்.***

“அறநெறியில் ஒழுகி, உள்ளத்தில் அன்பு கொண்டு, பிறர் நலம் கருதி, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்து வாழ்பவர்களை, இவ்வுலகம், தங்கள் மத்தியில் ஒரு தேவலோகத்துத் தேவனே வாழ்கிறான்," எனப் புகழும் வரும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

ஒருமுறை பகவான் புத்தரின் சிஷியர் ஆனந்தர், புத்தரிடம் "பகவான், பூக்களின் இனிய மணம் காற்றோடு செல்லும். காற்றுக்கு எதிராகச் செல்வதில்லை. காற்றோடும் செல்லும் மணம், காற்றுக்கு எதிராகவும் செல்லும் மணம் வையகத்தில் உண்டா?" என்று கேட்டார்.

"உண்டு ஆனந்தா, இங்கு, ஒரு கிராமத்திலோ, அல்லது பட்டினத்திலோ வாழும் ஒருவர், ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அவர் அறநெறியில் ஒழுகி, உள்ளத்தில் பக்தியும் அன்பும் உள்ளவராய், பிறர் நலம் கருதி, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்து வாழ்ந்தாரேயென்றால், மற்ற இல்லற வாழ்க்கை வாழ்வோரும், துறவிகளும் இவரைப் புகழ்ந்து உரைப்பார்கள். தெய்வலோகத்திலுள்ள தேவர்களும் இவரைப் புகழ்வார்கள். இவ்வாறு வாழ்வோரின் புகழ் நான்கு திசைகளிலும் செல்லும். இவ்விதப் புகழ் என்னும் மணம்

காற்றோடும் செல்லும், காற்றிற்கு எதிராகவும் செல்லும்” என்று ஆனந்தாவிடம் கூறினார் பகவான் புத்தர்.

இவ்வுலகில் இவருக்கு இப்படியொரு புகழ் என்றால், உடலை விட்டு உயிர் பிரிந்தபின், அடுத்த உலகில் இவருடைய சிறப்பைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

நற்செயல்கள் செய்ய அஞ்ச வேண்டாம். இன்பம், மகிழ்ச்சி, ஆனந்தம், இவையாவும் நல்வினைப் பயனே! என்கிறார் பகவான் புத்தர்.

சிலர் பொருள் தேடி, ஒளித்துச் சேமித்து வைப்பார்கள். தேவைப்படும்போது உதவும்; கடன் கட்ட உதவும்; துன்பம் வரும்போது உதவும் என பொருளை ஒளித்து சேமித்து வைப்பார்கள். சேமித்து ஒளித்து வைத்தப் பொருளை இழந்து பின் துயரப்படுவார்கள். இவ்வாறான பொருளை பகைவர்கள் அபகரித்துச் செல்வார்கள், உறவினர்கள் ஏமாற்றுவார்கள், பிள்ளைகள் அச்செல்வத்தை அழிப்பார்கள். நஷ்டத்தால் இழப்பார்கள், திருடர்கள் திருடிச் செல்வார்கள். நெருப்பாலும் வெள்ளத்தாலும் இழப்பார்கள், அல்லது வினைப்பயன் பழுக்கும்போது சேமித்த பொருளை இழந்து துயரப் படுவார்கள். இறுதியாக, மரணம் இவர்கள் சேமித்து வைத்துக் காத்த பொருளை இவர்களிடமிருந்து பிரித்துவிடும். மரணத்தின் வாயிலில் நிற்கும்போது, அடுத்த உலகிற்கு இவர்கள் எதை எடுத்துச் செல்வார்கள்? இவர்களோடு வரும் செல்வம்தான் எது?

இன்னும் ஒரு செல்வம் உண்டு. அச்செல்வத்தைப். பிள்ளைகளால் அழிக்க முடியாது. திருடர்கள் திருடிச் செல்ல முடியாது. நெருப்பாலும் வெள்ளத்தாலும் அழிக்க முடியாது. வினைப்பயன் பழுக்கும்போதும் அழியாது. மரணத்தாலும் பிரிக்க முடியாது. இங்கும் நிழல்போல் தொடர்ந்து வந்து, உடலை விட்டு உயிர் பிரிந்த பின்னும் அடுத்த உலகிற்கும் கூடவரும் செல்வம், மரணவாயிலில் நிற்கும்போது, தன்னோடு எடுத்துச் செல்லும் செல்வம். எது அந்தச் செல்வம்?

அறத்தில் ஒழுகி, நற்செயல்கள் செய்து, தன்னை அடக்கி வாழும் வாழ்வே அச்செல்வம். ஆண்களும் பெண்களும் இச்செல்வத்தை வாழ்வில் தேட வேண்டும் எனக் கூறிய பகவான் புத்தர், தொடர்ந்து,

> ***"அறிஞர் எனக் கூறப்படுபவர் நற்செயல்கள் செய்யட்டும். இச்செல்வமே அவரோடு கூட வரும் செல்வம். இச்செல்வம் இவ்வுலக வாழ்வில் பொருளும், புகழும் தரும். அடுத்த உலகில் தெய்வலோக இன்பங்களைத் தரும். ஆகவே, அறிவுடையோர் நற்செயல்கள் செய்வார்கள்,"*** *என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.*

காந்தியடிகள் திக்கற்றோருக்கும், ஏழைகளுக்கும் நன்கொடை வசூலித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் ஒரு நாள் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் காந்தி அடிகளைக் காண வந்தார். அடிகளுக்குத் தகவல் தெரிவித்து அவருடைய அனுமதியின் பேரில் அப்பெரியவர் அடிகளிடம் சென்றார். உள்ளே நுழைந்ததும், அப்பெரியார் பத்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து அடிகள் முன் சமர்ப்பித்தவாரே ,"மிகவும் வறிய ஏழைகளுக்காகவும், நற்குணம் படைத்த தகுதி வாய்ந்தவர்களுக்காகவுமே இந்தச் சிறு காணிக்கை. இவ்வாறான தரித்திர நாராயணர்களைப் பற்றி வேறு யாருக்குத் தங்களைவிட அதிகம் தெரியும்?" என்று கூறினார்.

"நீங்கள் மிக நல்ல காரியம் செய்திருக்கிறீர்கள்? எத்தனை வருடமாக இந்தத் தொகையைச் சிறுகச் சிறுக சேமித்தீர்கள் என்று சொல்ல முடியுமா?" என காந்தியடிகள் கேட்டார்.

“பல ஆண்டுகளாக; ஆனால் சென்ற ஆண்டு பூகம்ப நிதிக்கு ரூபாய் நூறு அனுப்பினேன், நூறு ரூபாய் அஸ்ஸாம் வெள்ள நிதிக்குக் கொடுத்தேன்; அலாகாபாத் குடியானவர்களின் உதவிக்காக ரூபாய் ஐநூறு கொடுத்து நான்கு ஆண்டுகள் இருக்கும்." என்றார் அந்தப் பெரியார். இதைக் கேட்டு காந்தி அடிகள் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். “சரி, தங்கள் வருமானம் என்ன? தங்களுக்குப் பென்ஷன் எவ்வளவு கிடைக்கிறது? நீங்கள் என்ன வேலை செய்தீர்கள்?

என்பனவற்றைப்பற்றி தெரிவிப்பீர்களா?" எனக் கேட்டார் காந்தியடிகள்.

"நான் ஒரு ஆரம்பப் பள்ளியில் ஆசிரியனாக இருந்தேன். அநேக வருடங்களுக்குப்பின் வேலையிலிருந்து விலகும்போது எனக்கு மாதம் 52 ரூபாய் ஊதியம் கிடைத்து வந்தது. எனக்குப் பென்ஷன் கிடைப்பதில்லை. அதற்குப்பதிலாக ஓய்வு பெற்றபோது இரண்டாயிரத்து எழுநூறு ரூபாய் இனாமாகக் கிடைத்தது' என்று பதிலளித்தார் அந்தப் பெரியவர்.

"ஓய்வு பெற்று நீண்ட நாட்களாகி விட்டதா?" என வினவினார் அடிகள்.

பெரியவர்: ஐந்து ஆண்டுகளாகி விட்டன.

அடிகள்: மாதம் எத்தனை ரூபாய் செலவு செய்கிறீர்கள்?

பெரியவர் : கொஞ்சம் பருப்பு - ரொட்டி, இவைகளுக்கு என்ன செலவு ஆகிவிடப்போகிறது? பத்து ரூபாயில் நான் காலம் கழிக்க முடியும். இப்போது நான் தனிக்கட்டைதானே! இதரப் பொறுப்பு எதுவும் இல்லை. முன்பு எனது சகோதரரின் மைந்தர்கள் இருவரை வளர்க்கும் பொறுப்பு இருந்தது. அவர்களைப் பேணி வளர்த்து படிக்கச் செய்தாகி விட்டது. இப்பொழுது கவலையற்றிருக்கிறேன். ஒரு சமஸ்கிருதப் பள்ளிக்கூடத்தை நடத்துகிறேன். பெரும் பகுதி நேரம் அதில் கழிந்து விடுகிறது. அது இலவசப் பள்ளிக்கூடம்.

ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியவராய் காந்தியடிகள் சொன்னார். "இவ்வளவு குறைந்த வருமானத்தில் பணம் சேமித்து வைத்திருக்கிறீர்கள்; சேமித்தவற்றை ஏழைமக்களின் உதவிக்காக செலவிடுகிறீர்கள். இவை எவ்வளவு நல்ல விசயங்கள்! ஒவ்வொருவரும் தங்களிடமிருந்து இப்பேர்பட்ட பொது நலத்தொண்டை கற்றுக்கொண்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும்!"

“மகாத்மா காந்திஜி, எனக்காக நான் செலவு செய்தது மிகக் குறைவே. எனவேதான் அவ்வப்போது ஏழை எளியவர்களுக்கு என்னால் ஆன உதவியும் தொண்டும் செய்ய முடிந்திருக்கிறது,” என்றார் பெரியார்.

"என்னிடம் இன்னும் கொஞ்சம் பணம் இருக்கிறது, மகாத்மா காந்திஜி. என்றைக்காவது ஒரு நாள் நான் அதனையும் தங்கள் திருவடிகளில் சமர்ப்பிக்கத்தான் போகிறேன். வேறு யாருக்குப் பணத்தைக் கொடுப்பதென்றே எனக்குத் தெரியவில்லை. நான் தங்களைத்தான் அறிவேன். தாங்களோ ஆதரவற்றவர்களையும், உற்றார் உறவினர் அற்ற ஏழைகளையும், திக்கற்றவர்களையும், ஏழைகளையும் அறிவீர்கள். நான் மனப்பூர்வகமாக தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்," என்று எல்லையில்லா மகிழ்ச்சியுடன் கூறினார் அந்தப் பெரியார்.

அந்தப் பெரியார், உள்ளத்தில் பக்தி கொண்டு, அறநெறியில் ஒழுகி நற்பண்புகளுடன் தன் சக்திக்கேற்ற நற்செயல்கள் செய்து வாழ்ந்தார். அதைக் கேட்ட காந்தி அடிகள், மனமகிழ்ந்து அவரைப் புகழ்ந்துரைத்தார். இவ்வாறு, அறநெறியில் ஒழுகி, நற்செயல்கள் செய்து வாழும் வாழ்வின் சிறப்பைத்தான் திருவள்ளுவரும் இவ்வாறு கூறுகிறார்.

***சிறப்புஈனும் செல்வமும்ஈனும் அறத்தினூ உங்கு***
***ஆக்கம் எவனோ உயிர்க்கு.***

அதாவது, அறத்தில் ஒழுகி நற்செயல்கள் செய்வோருக்கு, இவ்வுலகில் பொருளும் புகழும் அடுத்த உலகில் தெய்வலோகச் சிறப்பும் கிடைக்கும். இதைவிட சிறந்த செல்வம் மனித உயிருக்கு வேறு ஏது? (வேறு இல்லை)

அறத்தை மறந்து, ஒழுக்கமின்றி, பழி பாவங்களுக்கு அஞ்சாமல் குற்றங்கள் செய்பவன், தனக்குத்தானே பகைவன். ஒரு பகைவன், தன் பகைவனுக்குச் செய்ய விரும்பும் கேடுகளை எல்லாம், இவன் தனக்குத்தானே செய்துக் கொள்வான். இவன் செய்த குற்றங்கள் இவனை இங்கும் வருத்தி, துன்பம் கொடுக்கும். உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் நரகலோகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ, அடுத்த உலகிலும் துன்பமுறுவான். இதைத்தானே ஒரு பகைவன் தன் பகைவனுக்குச் செய்ய விரும்புவான்.

அறத்தில் ஒழுகி, நற்செயல்கள் செய்பவன் தனக்குத்தானே நண்பன். ஒரு நண்பன், தன் நண்பனுக்குச் செய்ய

விரும்பும் நன்மைகளையெல்லாம், இவன் தனக்குத்தானே செய்துக் கொள்வான். இவன் செய்த நற்செயல்கள் இவனுக்கு இங்கும் இன்பத்தைக் கொடுக்கும். உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் தெய்வலோகச் சிறப்பையும் தரும். இதைத்தானே ஒரு நண்பன் தன் நண்பனுக்குச் செய்ய விரும்புவான்?

மரணம் எந்த நேரத்திலும் வருமாதலால், பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம், முதுமை வந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாது இளமையிலிருந்தே அறநெறியில் ஒழுகி, உள்ளத்தில் பக்தியை வளர்த்து, நற்செயல்கள் செய்ய வேண்டும். அப்போது, எந்நேரத்தில் மரணம் வந்தாலும், நாம் அடுத்த உலகப் பயணத்திற்குப் பொருள் தேடிக் கொண்டோம். அறியாமை எனும் இருளில் மூழ்கித் தூங்கும் இவ்வுலகில், இவர்களே விழித்திருப்போர்.

திருவள்ளுவர் இதைத்தான் இவ்வாறு கூறுகின்றார்.

***அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது***
***பொன்றுங்கால் பொன்றாத் துணை***

பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம், முதுமை வந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என்று கருதாமல், இளமைப் பருவத்தில், இன்றே, அறநெறியில் ஒழுகி, நற்செயல்கள் செய்ய வேண்டும். அப்போதுதான், மரணம் எந்த நேரத்தில் வந்தாலும், நாம் செய்த அறம், அழியாத் துணையாக உதவி செய்து, அடுத்த உலகிற்கு நம்மோடு கூடவரும்.

இதுவே, அடுத்த உலகப் பயணத்திற்குப் பொருள் தேடும் வழி. தூங்கும் இவ்வுலகில் இவர்களே விழித்த மனிதர்கள். இவ்வுலகில், அறத்தில் ஒழுகி, நற்செயல்கள் செய்து வாழ்வோர் சிலரே. ஆகவே, மனிதர்களில் சிலரே தெய்வலோகம் செல்கின்றனர் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

*"(அறியாமை என்னும்) இருளே இவ்வுலகின் இயற்கை. இங்கு பார்வையுடையோர் சிலரே. வலையிலிருந்து தப்பிய பறவைகள் போல், சிலரே சுவர்க்கம் செல்கின்றனர்."*

மனிதர்களில் வெகு சிலரே தெய்வலோகம் போவோர்

என்று பகவான் புத்தர் இவ்வாறும் விளக்கியுள்ளார்.

ஒரு முறை, பகவான் புத்தர், தன் விரல்களுக்கிடையில் சிறிது தூசு எடுத்து தன் சிஷியர்களிடம் காண்பித்து, "எது பெரிது? என் விரல்களுக்கிடையில் உள்ள இந்த சிறு தூசியா, அல்லது இந்தப் பூமியா? என்று கேட்டார்.

“பகவான், இப்பூமியே மிகப் பெரியது. தங்கள் விரல்களுக்கிடையில் உள்ள தூசு மிகச் சிறியது. ஒப்பிட முடியாத அளவிற்கு இப்பூமி தங்கள் விரல்களுக்கிடையில் இருக்கும் தூசைவிட மிகப் பெரியது," என்று சிஷியர்கள் கூறினர்.

"மனிதர்களில், உடலை விட்டு உயிர் பிரிந்தபின், தெய்வலோகம் செல்வோர் இந்தத் தூசு அளவுதான். மனிதர்களில், உடலை விட்டு உயிர் பிரிந்தபின் நரகலோகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ, பிறப்போர் இந்தப் பூமியளவு" என்று பகவான் புத்தர் தன் சிஷியர்களிடம் கூறினார். ஏன் சிலரே தெய்வலோகம் செல்கின்றனர்? அறநெறியில் ஒழுகி, உள்ளத்தில் அன்பும், பக்தியும் கொண்டு, நற்செயல்கள் செய்து வாழ்வோர் சிலரே.

பகல் இரவு என நாட்கள் ஓடுகின்றன. கசாப்பு கடைக்கு இழுத்துச் செல்லப்படும் மாடு, அது எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், மரணத்தை அருகில் கொண்டு வருவதுபோல், ஒவ்வொரு நாளும் நம் வாழ்வு, குறைந்து கொண்டே வருகிறது. நம்மை நோக்கி வருகின்ற மரணத்தை எவராலும் தடுத்தி நிறுத்த முடியாது. இந்நிலையில் நாம் செய்ய வேண்டியது என்ன? அறநெறியில் ஒழுகி, உள்ளத்தில் பக்தியை வளர்த்து, நற்செயல்கள் செய்து வாழ வேண்டும். அப்போது மரணம் எந்த நேரத்தில் வந்தாலும், நம் உள்ளம் நடுங்காது. ஏன் நடுங்காது? நாம் அடுத்த உலகப் பயணத்திற்கு, பொருள் சேகரித்துள்ளோம். நாம் செய்த புண்ணியம், மரணவாயிலில் அழியாத் துணையாக உதவி செய்து, தெய்வலோகத்திற்கு அழைத்துச் செல்லும். இதுவே அறிவுடைமை.

பாவம் இல்லை, புண்ணியம் இல்லை, செயல்கள் பழுப்பதில்லை, அடுத்த உலகம் இல்லை போன்ற தவறான

கருத்துகளை மனதில் கொண்டு, பெரியோர்களையும், இறைவன் அருளால் பெரியோர்கள் செய்த உபதேசங்களையும் இகழ்ந்து, அறமில்லாமல், ஒழுக்கமில்லாமல், பக்தியில்லாமல், நற்செயல்கள் ஏதும் செய்யாமல் வாழ்பவருக்கு, மரணம் வரும்போது எது துணை நிற்கும்? பேச முடியாதபடி நா இழுக்கப்பட்டு, விக்கல் எழுந்து உயிர் பிரியும் போது, அடுத்த உலகப் பயணத்திற்கு, இந்தக் குறுகிய மனித வாழ்க்கையில் இவன் தேடிய பொருள்தான் என்ன?

கடைசி நேரத்தில் உடலை விட்டு உயிர் பிரிவதற்கு முன், பேச முடியாதபடி நா இழுத்து வாயில் எச்சில் வரும்போது, இவன் செய்த பாவங்களை, இவன் மனம் இவனிடம் காண்பிக்கும். இதுவே இவன் அடுத்த உலகிற்குத் தேடிய பொருள். அதைக் கண்டு இவன் உள்ளம் நடுங்கும்.

எங்கே, இப்போது முயன்று பார்! உன் முன் தோன்றும் பாவங்களின் பிடியிலிருந்து உன்னால் தப்ப முடியுமாவென்று, முடியாது. நீ செய்த பாவச் செயல்கள் இப்போது பழுத்து விட்டன. அதன் பயனை நீ அழுதுக் கொண்டே அனுபவிக்கத்தான் வேண்டும். இதுவே நீ அடுத்த உலகிற்குத் தேடிய பொருள். இப்போது நீ வருந்துவாய். பாவங்கள் செய்தேனே! பெரியோர்களை இகழ்ந்தேனே! அடுத்த உலகம் இல்லையென்று வாதாடினேனே! செயல்கள் பழுப்பதில்லை என்றேனே! பாவம் ஏது, புண்ணியம் ஏது என்று தர்க்கம் புரிந்தேனே!

இப்போது புலம்பி என்ன பலன்? வருந்தி என்ன பலன்? அழியும் தருவாயில் அழுது என்ன பலன்? மரணத்தின் வாயிலில் நின்று வருந்தும் நீ, கிடைப்பதற்கரிய மானிடப் பிறவி கிடைத்தும், உன் தவறான கருத்தினால், பக்தியில்லாமல், அறத்தை புறக்கணித்து, குற்றங்கள் செய்து, பாவத்தை தேடிக் கொண்டாய். அவை இப்போது உன் முன் வந்து நிற்கின்றன. அதைக் கண்டு உன் உள்ளம் நடுங்குகிறது. அதன் பிடியிலிருந்து நீ தப்பி ஓட முடியாது. நீ செய்த தீயக் கருமத்தின் பலனை நீயே அனுபவிக்கும் காலம் வந்துவிட்டது.

பாவம் இல்லை, புண்ணியம் இல்லை, செயல்கள் பழுப்பதில்லை, அடுத்த உலகம் இல்லை போன்ற தவறான கருத்துகளை மனதில் கொண்டு, பெரியோர்களையும், இறைவன் அருளால் பெரியோர்கள் செய்த உபதேசங்களையும் இகழ்ந்து, அறமில்லாமல், ஒழுக்கமில்லாமல், பக்தியில்லாமல், நற்செயல்கள் ஏதும் செய்யாமல், பாவங்கள் செய்தவனுக்கு, மரணம் வரும்போது, அவன் நிலை இதுவே. ஏன்? இவன் அடுத்த உலகிற்கு பொருள் ஏதும் தேடிக் கொள்ளவில்லை. உடலை விட்டு உயிர் பிரியுமுன், இவன் செய்த பாவங்களை இவன் மனம் இவனிடம் காண்பிக்கும். அதைக் கண்டு உள்ளம் நடுங்கி இறப்பான். அடுத்த உலகிலும், பேயாகவோ, மிருகமாகவோ, நரகத்திலோ பிறந்து துன்புறுவான். ஆகவே, பேச முடியாதபடி நாவை இழுத்து, விக்கல் எழுந்து உயிர் பிரிவதற்கு முன்னே, விரைந்து அறநெறியில் ஒழுகி நற்செயல்கள் செய்துவிட வேண்டும்.

எரியும் வீட்டிலிருந்து காப்பாற்றிய பொருள்தான் பிறகு உதவும். இவ்வுலகம் முதுமை, மரணம் என்னும் தீயினால் எரிகிறது. இதை நெஞ்சில் நிறுத்தி, உடலில் உயிர் இருக்கும்போதே அறநெறியில் ஒழுகி, நற்செயல்கள் செய்துவிட வேண்டும். இதுவே நாம் அடுத்த உலகிற்குக் காப்பாற்றிய பொருள். எனக்கும் வியாதி வரும், எனக்கும் முதுமை வரும், எனக்கும் மரணம் வரும் என்பதை மனதில் வைத்து, உடலில் இருந்து உயிர் பிரியுமுன்னே, அறநெறியில் ஒழுகி, நற்செயல்கள் செய்து அடுத்த உலகிற்குப் பொருள் தேடிக் கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்கின்றார். அப்போது, எந்நேரத்திலும் மரணம் வந்தாலும், நாம் அடுத்த உலகப் பயணத்திற்குப் பொருள் தேடிக் கொண்டோம். மரணம் வரும்போது, நம் உள்ளம் நடுங்காது. நாம் செய்த புண்ணியம் மரணவாயினில் அழியாத் துணையாக உதவி செய்து, அடுத்த உலகத்திற்கு நம்மோடு கூடவரும்.

***நாச்செற்று விக்குள் மேல் வாராமுன் நல்வினை***
***மேற் சென்று செய்யப்படும்.***

அதாவது, பேசமுடியாதபடி நா இழுக்கப்பட்டு, விக்கல்

எழுந்து உயிர் பிரிவதற்கு முன்னே, விரைந்து அறநெறியில் ஒழுகி நற்செயல்கள் செய்துவிட வேண்டும். இதனை மறந்தோர் நிலை, அதாவது அறநெறி ஒழுக்கமில்லாமல், பக்தியில்லாமல், நற்செயல்கள் செய்யாமல், மனதில் தவறான கருத்துகளைக் கொண்டு, பாவங்கள் செய்தவனின் நிலை, மரணம் வரும்போது என்ன என்பதை பகவான் புத்தர் இவ்வாறு விளக்குகின்றார்.

***"இப்போது நீ உலர்ந்த சருகு போல் ஆகிவிட்டாய். எம தூதர்கள் உன் அண்டையில் வந்திருக்கின்றனர். நீயும் பிரிவதற்கான தருணத்தில் (மரண வாயிலில்) நிற்கின்றாய். ஆனால், நீயோ பயணத்திற்கு (அடுத்த உலகிற்கு) பொருள் ஏதும் சேர்க்கவில்லை.'***

***"உன் வாழ்க்கை முடியப் போகிறது. எமன் சந்திக்கு நீ வந்துவிட்டாய். வழியிலே தங்கும் இடமும் வேறில்லை. நீயோ பயணத்திற்கு (அடுத்த உலகிற்கு) பொருள் ஏதும் சேகரித்து வைக்கவில்லை.'***

மரணம் எந்த நேரத்திலும் வருமாதலால், நாம் ஒவ்வொருவரும் நம்மையே கேட்டுக் கொள்ள வேண்டும். மரணம் வரும்போது என் நிலை என்ன? இன்றிரவே எனக்கு மரணம் வந்நாலும் வரலாம். அப்போது என் நிலை என்ன? என்னிடம் அறமும் பக்தியும் நற்செயல்களும் உண்டா? நான் அடுத்த உலகிற்குப் பொருள் சேர்த்துள்ளேனா? உண்டென்றால் நாம் மகிழலாம். இல்லையென்றால் இன்றே, விரைந்து அறத்தில் ஒழுகி, பக்தியை வளர்த்து, நற்செயல்கள் செய்திட வேண்டும். அப்பொழுதுதான் மரணம் வரும்போது உள்ளம் நடுங்காது. நாம் செய்த புண்ணியம், மரணவாயிலில் வந்து துணைநின்று, நம்மை அடுத்த உலகிற்கு அழைத்துச் செல்லும்.

குரு நானக் அவர்கள் தம் சுற்றுப் பயணத்தினூடே ஓர் ஊர் வந்தார். அந்த ஊர்ப் பெருஞ் செல்வர், அவரை வரவேற்று விருந்தளித்தார்.

விருந்து முடிந்ததும் செல்வந்தர் குரு நானக்கைப் பார்த்து, "ஐயா! நான் இந்த ஊரிலேயே பெரிய பணக்காரன். நான்

தங்களுக்குச் செய்ய வேண்டியது எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள். எவ்வளவு பொருள் செலவானாலும் பரவாயில்லை" என்று பணிவுடன் கேட்டுக் கொண்டான்.

இதைக் கேட்ட குரு நானக் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பிறகு தன் சட்டைப் பைக்குள் கைவிட்டு பழைய ஊசி ஒன்றை எடுத்தார். அதை அந்தச் செல்வந்தரிடம் கொடுத்தார். செல்வந்தருக்கு ஒன்றும் புரியவில்லை. "ஐயா, எதற்காக இந்த ஊசியை என்னிடம் கொடுத்தீர்கள்?" என்று கேட்டார்.

"அப்பனே! நாம் இருவரும் இங்கு இறந்தபின் மறு உலகத்தில் சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த ஊசியை அப்பொழுது கொண்டு வந்து என்னிடம் கொடு. இந்த உதவியை எனக்காக நீ செய்தால் போதும்," என்றார் குரு நானக்.

இதைக் கேட்ட செல்வந்தன் திகைத்தான். "ஐயா, நான் இறக்கும்போது இந்த ஊசியை எப்படி மறு உலகத்திற்கு எடுத்து வருவது? என்று வினவினான்.

இந்தச் சிறு ஊசியைக்கூட நாம் இறக்கும்போது மறு உலகத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. அப்படி இருக்கையில் உன் செல்வத்தை நீ எப்படி அங்கு எடுத்து வரப்போகிறாய்? நாம் செய்த நல்வினை, தீவினைகளே நம்முடன் கடைசி வரை இருக்கும். அதுவே நாம் அடுத்த உலகிற்குத் தேடிய பொருள். நாம் செய்த நற்செயல்களும், நாம் செய்த தீயச் செயல்களும், இவையே, அடுத்த உலகிற்கு நம்மோடு வரும். நாம் செய்த புண்ணியமும், பாவமும், இவையே உடலை விட்டு உயிர் பிரிந்தபின், நம்மோடு அடுத்த உலகத்ததிற்கு வருபவை. பிறர் நலத்திற்காகப் பொருளை செலவு செய்யாவிட்டால், அந்தச் செல்வத்தால் எந்தப் பயனும் இல்லை" என்று விளக்கினார் குரு நானக்.

இதைக் கேட்ட செல்வந்தனின் அறிவுக் கண்கள் திறந்தன. குரு நானக்கை வணங்கி, ஐயா, என் ஆணவம் இன்றுடன் நீங்கிவிட்டது. இனி என் செல்வத்தை நல்ல வழியில்

செலவிடுவேன்" என்று கூறி அவரை வணங்கினான்.

பொருள் பெற்றவன், அடுத்த உலகப் பயணத்திற்கு எப்படி அப்பொருளைச் சேமிப்பது என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

***அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்***
***பெற்றான் பொருள்வைப் புழி***

செல்வம் நிலையற்றது. எப்படி வந்ததோ, அப்படியே கையைவிட்டு ஒரு நாள் போய்விடும். அப்படியே இருந்தாலும், இவ்வுலகில் வாழும்வரைதான். மரண வாயிலில் நிற்கும் போது, அதை நம்மோடு அடுத்த உலகிற்கு எடுத்துச் செல்ல முடியாது. அழிந்து போகிற, தொடர்ந்து வராத செல்வத்தை, அழியாது பின்தொடரச் செய்வது எப்படி? வறியவரின் கொடும்பசியைத் தானங்கள் செய்து நீக்க வேண்டும்; அதாவது, பிறர் நலனுக்காக தான் பெற்ற செல்வத்தை உபயோகிக்க வேண்டும். பொருளைப் பெற்றவன், அப்பொருளை தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேமித்து வைக்கும் இடம் அதுவே. எப்படி உதவும்?
மரணவாயிலில் நிற்கும்போது, அவன் செய்த புண்ணியம், அழியாத துணையாக உதவி செய்து அடுத்த உலகிற்குக் கூடவரும்.

***அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்***
***அதகுப ஆங்கே செயல்***

ஒருவருக்கு வாழ்வில் செல்வம் நிலைத்திருக்கக் கூடியதல்ல. இத்தகைய நிலையற்ற செல்வத்தைப் பெற்றவுடன், எவ்வளவு விரைவில் அறச் செயல்களை செய்யமுடியுமோ, அவ்வளவு விரைவில் நற்செயல்கள் செய்திட வேண்டும். அப்போது, நமக்கு அழியாச் செல்வங்களான புகழும், புண்ணியமும் கிடைக்கும்.

***ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்***
***தோற்றம் நிலைக்கும் பொறை***

பிறரைக் காட்டிலும் நாம் மிகுதியாக சம்பாதிப்போம் என்று நினைத்து, பொருள் தேடுவதையே விரும்பி, தேடிய பொருளை இருகப் பிடித்து சேர்த்து வைப்பதையே விரும்பி, அப்பொருளைப்

புகழும், புண்ணியமும் தரும் நற்செயலுக்குச் செலவிடாதவன்,
இப்பூமிக்கு பாரமேயின்றி வேறில்லை.

***எச்சமென்று என் எண்ணுங் கொல்வோ ஒருவரால்***
***நச்சம் படாஅ தவன்.***

கிடப்பதற்கறிய மானிட பிறப்பில், நன்மைகள் செய்து, புகழையும், புண்ணியத்தையும் தேடிக்கொள்ள வேண்டும். நற்செயல்கள் பலரால் போற்றப்படுவான். இறந்த பின்னும் அவனுடைய பெயரும் புகழும் நிலைத்திருக்கும். பொருள் பெற்றவன், பொருளை இருகப் பிடித்து, தான தருமங்கள் செய்யாவிட்டால், எவராலும் விரும்பப்படாமல், எல்லோராலும் வெறுக்கப்படுவான். பொருளைச் சேகரித்து, இருகப்பிடித்து நன்மைகள் செய்யாது வாழ்பவனுக்கு புகழ் இல்லை. இறந்தபின் அவன் பெயரும் ஒரு நாளும் நிலைத்து நிற்காது. மரணத்திற்குப்பின், இருக்கப் பிடித்து காத்த பொருளும் இவனுக்குச் சொந்தமாகாது. புகழையும் இகழ்ந்து, பொருளையும் இழந்த இவன், மரணத்திற்குப் பின் எஞ்சி நிற்பதாக எதை நினைப்பானோ?

***பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்***
***மருளானாம் மாணாப் பிறப்பு***

பொருளினால்தான் எல்லாப் பெருமைகளும் உண்டு என்று உணர்ந்து, அதனைச் சம்பாதித்து, பிறருக்குக் கொடாது, அதனிடத்து பற்று வைத்து, அதை இருகப்பிடித்து வாழும் மயக்கத்தினால், ஒருவனுக்குப் பசியினால் வருந்தத்தக்க பேய்பிறவி உண்டாகும்.

பகவான் புத்தரின் சிஷயர்களில் ஒருவருக்குச் சீதபேதி. சீத பேதியினால், உடல் பலவீனமாகி, எழமுடியாமல், படுக்கையிலேயே மலம் கழித்து அதிலேயே உழன்று கிடந்தார். அவரோடு கூட இருந்த மற்ற சிஷ்யர்கள், இவர் இறக்கப் போகிறார். இவரால் இனி எந்தப்பயனும் இல்லை எனக் கருதி, அவருக்கு உதவவில்லை.

இதை அறிந்த பகவான் புத்தர், சிஷ்யர் ஆனந்தாவுடன் அங்கு வந்தார். அவர் விரும்பியிருந்தால், அக்கணமே தன் தெய்வீகச் சக்தியினால் அந்தச் சிஷியரை குணப்படுத்தியிருக்க

முடியும். கருணையே வடிவான அவர் அதைச் செய்யவில்லை. ஏன்? அச் செயலால் இவ்வுலகம் பயன்பெறாது. இவ்வுலகின் நன்மையை மனதிற் கொண்டு, உலகிற்கு உபதேசம் செய்யக் கருதி, ஒரு நற்செயலைச் செய்துக் காண்பித்தார். ஆனந்தரிடம், "ஆனந்தா, போய் தண்ணீர் கொண்டு வா. நாம் இந்தச் சகோதரரைக் கழுவுவோம்" என்று கூறினார். ஆனந்தா தண்ணீர் கொண்டு வந்தவுடன் பகவான் புத்தர் தண்ணீர் ஊற்ற, ஆனந்தர் சிஷியரின் உடலைக் கழுவினார். பிறகு பகவான் புத்தர் சிஷியரின் தலையைப் பிடித்தும், ஆனந்தர் காலைப்பிடித்தும், தூக்கிச் சென்று புதிய படுக்கையில் படுக்க வைத்து, புதிய ஆடையை உடுத்தினார். சிஷ்யரின் அருகில் அமர்ந்து அன்புடன் அவருக்குத் தர்ம உபதேசம் செய்தார்.

அதன்பின் மற்ற சிஷ்யர்களை அழைத்து,

> **"நீங்கள் ஒருவருக்கொருவர் உதவாவிட்டால் வேறு யார் உங்களுக்கு உதவுவார்" என்று உரைத்து "எனக்குச் சேவை செய்ய விரும்புவோர், வியாதியினால் துன்புறுவோருக்கு சேவை செய்யுங்கள்" எனக் கூறினார்.**

சம்பாரன் என்பது இந்தியாவில், பீகாரிலுள்ள ஒரு சிறிய ஊர். அங்குள்ள விவசாயிகள், வெள்ளையர்களின் ஆதிக்கத்தின் கீழ், மிகவும் துன்புற்று வந்தார்கள். விவசாயிகள் மகாத்மா காந்தியிடம் தங்கள் துன்பங்களைக் கூறி, முறையிட்டார்கள். மகாத்மா காந்தி, சம்பாரன் சென்று, விவசாயிகள் மத்தியிலேயே தங்கி வெள்ளையர்களுக்கு எதிராக சத்தியாகிரகப் போராட்டத்தை நடத்தினார். காந்திஜியைச் சுற்றி ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். அவர்களில் குஷ்ட நோயால் பீடிக்கப்பட்ட ஒரு விவசாயக் கூலியும் இருந்தான். அவனோ கால்களில் பழைய துணிகளைச் சுற்றிக் கொண்டு, நடந்து வந்தான். காயங்கள் வெடித்து விட்டதால், கால்கள் வீங்கிப் போயிருந்தன. அவனுக்குத் தாங்க முடியாத வலி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. எனினும் மனோதிடத்துடன் தன் வேலைகளைச் செய்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் நடந்து போகையில் கால்களில் சுற்றியிருந்த துணி அவிழ்ந்து கீழே விழுந்து விட்டது. காயத்திலிருந்து இரத்தம்

கசிய ஆரம்பித்தது. நடப்பதும் கடினமாகி விட்டது. மற்ற நண்பர்கள் மேலே நடந்து சென்று விட்டார்கள். காந்திஜியோ மிக வேகமாக நடப்பவர். அவர் முன்னனியில் சென்றுக் கொண்டிருந்தார். எனவே, அந்த நோயாளி பின்தங்கி விட்டதை யாரும் கவனிக்கவில்லை.

தாம் தங்கியிருந்த இடத்தை காந்திஜி அடையும்போது, இருட்டி விட்டது. காந்திஜியோடு வந்த எல்லாரும், அவர் இல்லத்தில் பிரார்த்தனைக்காக கூடினார்கள். அனைவரும் பிரார்த்தனைக்காகக் கூடியதும் காந்திஜி அந்த நோயாளியைத் தேடினார். அவரை எங்கும் காணவில்லை. உடனே, அவர்களிடம் "நம்முடன் ஒரு கூலியாள் வந்தாரே, அவர் எங்கே?" என்று கேட்டார்.

"பாபுஜி, அவரால் வேகமாக நடக்க முடியவில்லை. ஆதலால் அவர் களைத்துப் போய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து விட்டார்." என்று அங்கிருந்த ஒருவர் பதிலளித்தார்.

காந்திஜி கையில் ஒரு விளக்கை ஏந்தி அந்த நோயாளியைத் தேடிப் புறப்பட்டார். அந்தக் கூலியாள் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு ராம நாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தான். காந்திஜியைக் கண்டதும் அவனுடைய முகம் மலர்ந்தது.”உம்மால் நடக்க முடியவில்லை என்றால் என்னிடம் சொல்லியிருக்கலாமே" என்று காந்திஜி மிகக் கனிவான குரலில் கூறினார்.

கூலியாளின் கால்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்ததைப் பார்த்த காந்திஜி, தமது மேல்துண்டைக் கிழித்து அவனுடைய கால்களில் சுற்றினார். பின் பக்கத் துணையாக நின்று அவனைத் தம்முடைய தங்குமிடத்திற்கு அழைத்து வந்தார். அன்று அவனுடைய கால்களை நன்றாகக் கழுவி சுத்தப் படுத்திய பிறகுதான் பிரார்த்தனைக் கூட்டத்தை ஆரம்பித்தார்.

பிறர் துன்பம் கண்டு உள்ளத்தில் இரக்கங்கொண்டு உதவுவது நல்லோர் பண்பு. இன்பத்தில் இன்பம் பிறரது துன்பக் கண்ணீரைத் துடைப்பது. தன்னலம் இன்றி பிறர் நலம் கருதி

நல்லோர் செய்யும் சேவை, அதை நினைக்குந் தோறும் உள்ளம் மகிழும். மற்றவர் நலன் கருதி நல்லோர் செய்யும் சேவைகளே இவ்வுலகில் மனிதர்களுக்கு வரும் நன்மைகள்.

நாம் ஒவ்வொருவரும் பிறர் செய்த நற்செயல்களால் பலவகைகளில் நன்மைகளை அடைந்திருக்கிறோம். பெற்றோர், ஆசிரியர், மதகுருக்கள், நண்பர்கள், உறவினர்கள், அறிமுகமில்லாதவர்கள், தொண்டூழியர்கள், அரசாங்கத்தினர் எனப் பலர் செய்த நற்செயல்களே நம் வாழ்நாளில் நமக்குக் கிடைத்துள்ள நன்மைகள் எனலாம். பிறர் நமக்குத் துன்பம் தருவதை நாம் விரும்புவதில்லை. அதுபோல் நாமும் பிறருக்குத் துன்பம் தராமல், அறத்தில் ஒழுகி, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்வதை ஒரு நல்ல ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும். இவ்வுலகில் இவ்வாறு வாழ்வது சிரமமாகத்தான் இருக்கும் என பகவான் புத்தர் உரைக்கின்றார்.

***"வெட்கமின்றிக் காகத்தைப் போல் துணிவுடையவனுக்கும், வம்பு வளர்ப்பவனுக்கும், புறங்கூறுவோனுக்கும், முரடனுக்கும், தூர்த்தனுக்கும் வாழ்க்கை எளிதாகவே இருக்கிறது.***

***"ஆனால், நாணமுள்ளவனுக்கும், அறநெறியில் நாட்டமுள்ளவனுக்கும், சுயநலமற்றவனுக்கும், அகங்கார அற்றவனுக்கும், தூயோனுக்கும் வாழ்க்கை கஷ்டமாகவே இருக்கிறது.***

கஷ்டமாக இருந்த போதிலும், உள்ளத்தில் பக்தி கொண்டு, நல்வழியில் நடப்போருக்கு பிற்காலத்தில் நன்மையே வரும். தீமையென்பது இல்லை. அவர்கள் செய்த நற்செயல்கள் பழுக்கும்போது, "நான் செய்த புண்ணியம்' என்று இன்பமுறுவார்கள் என பகவான் புத்தர் கூறுகின்றார்.

***“மனிதன் புண்ணியத்தைச் செய்வானாகில், அதையே திரும்பத் திரும்பச் செய்வானாக. அவன் அதில் திளைத்திருக்கட்டும். புண்ணிய மூட்டை மிகவும் இன்பகரமானது.”***

***“நல்லவனும் தான் செய்த புண்ணியம் பயனளிக்காதவரை துன்பத்தையே அடைகிறான்; ஆனால் புண்ணியம் பயனைக் கொடுக்கும்போது இன்பமடைகிறான்.”***

பிறந்தவரெல்லாம் ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும். வாழ்க்கை இங்கு பிறப்பில் ஆரம்பித்து மரணத்தோடு முடிவதுபோல் தோன்றிய போதிலும், உண்மை அதுவல்ல என்றும், முற்பிறப்பில் செய்த செயல்கள் கட்டிய கூடே இவ்வுடலென்றும், இப்பிறப்பில் நாம் செய்யும் நல்வினை, தீவினைகளே நம் நிலையை அடுத்த உலகில் நிர்ணயிக்கும் என்றும் பெரியோர்கள் கூறியுள்ளனர். "அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது" என்று ஔவையார் கூறியுள்ளார்.

கிடைப்பதற்கரிய மானிடப் பிறப்பைப் பெரும் புண்ணியமாகக் கருதி, தேவலோகத்திற்கும் மோட்சத்திற்கும் போகும் பாதையில் அடியெடுத்து நடப்போரே அறிவுடையோர். அடி எடுத்து நடப்பது என்றால் என்ன? அறநெறியில் ஒழுகி, உள்ளத்தில் பக்தி கொண்டு, நான் என்னும் அகந்தையைப் போக்கி, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்து வாழும் வாழ்வே, தெய்வலோகத்திற்கும், மோட்சத்திற்கும் போகும் வழியில் அடி எடுத்து நடப்பதாகும்.

இந்தக் குறுகிய மனித வாழ்வில், அறமில்லாமல், ஒழுக்கமில்லாமல், பக்தியில்லாமல், நான் எனும் அகந்தையில், பழி பாவங்களுக்கு அஞ்சாமல், தீய செயல்கள் செய்து நற்செயல்கள் ஏதும் செய்யாததால், உடலை விட்டு உயிர் பிரிந்தபின் நரகத்திலோ, மிருகமாகவோ, பேயாகவோ பிறந்து துன்பமுறுவது அறிவின்மை.

பகவான் புத்தர் வாழ்ந்த காலத்தில், இந்தியாவில் சவத்தி என்றொரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்தில் ஒரு செல்வந்தர் வாழ்ந்தார். அவர் அப்பட்டணத்து ஏழை, எளியவர்களுக்கும், அனாதைகளுக்கும், ஆதரவற்றோருக்கும் தானம் செய்து, நற்செயல்கள் செய்து வாழ்ந்து வந்தார். அவரது தான தர்மங்களைக் கண்ட அப்பட்டணத்து மக்கள் அவரை 'அனாத பிண்டகர்" என்று அன்புடன் அழைத்தார்கள். அதாவது அனாதைகளை ஆதரிப்பவர் என புகழ்ந்தனர்.

அவர் பகவான் புத்தரைச் சந்தித்து தர்ம உபதேசம் கேட்டதும், அவர் உள்ளத்தில் பக்திக் கண் திறந்தது. அவர் சவத்தியில் ஒரு மடத்தை அமைத்து, அதில் தங்கி மக்களுக்கு உபதேசம் செய்யுமாறு பகவான் புத்தரை வேண்டிக் கொண்டார்.

அவர் பகவான் புத்தரிடம் மிகவும் பக்தி கொண்டவர். அவர் உள்ளத்தில் பக்தி கொண்டு, அறநெறியில் ஒழுகி, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்து வாழ்ந்து வந்தார். பகவான் புத்தர் இவ்வுலகில் இருக்கும் போதே அவர் மரணமடைந்தார்.

அவர் இறந்து சில காலம் கழித்து ஓர் இரவு பகவான் புத்தருக்கு முன் ஒரு தேவக் குமாரன் தோன்றினார். அவருடைய உடல் ஒரே ஜோதி மயமாகத் தோன்றியது. அவருடைய உடலிலிருந்து வந்த ஒளியினால் அந்தப் பூங்காவனமே பேரொளியுடன் விளங்கியது. தேவகுமாரன் பகவான் புத்தரை வணங்கி, புத்தரையும் தர்மத்தையும் சங்கத்தையும் புகழ்பாடியபின் தொடர்ந்து இவ்வாறும் பாடினார்.

**"அன்புடைமையும், கல்வி அறிவும், தன்னடக்கமும்,**
**அறநெறியில் ஒழுகி தூய்மையான வாழ்வு வாழ்தலும்,**
**இவையே மனிதர்களைத் தூய்மைப் படுத்தும்**
**பிறப்பினாலும் இல்லை, செல்வத்தாலும் இல்லை.**
**ஆகையால் தன் நன்மையை விரும்பும் அறிவுடையோர்,**
**நல்வழி எதுவெனத் தேடி அதில் தன் மனதை முழுமையாகப் பழகட்டும் இதுவே தூய்மைக்கு வழி."**

எனப் பாடிய பின், பகவான் புத்தரை மீண்டும் வணங்கி, எப்படித் தோன்றினாரோ அப்படியே அவ்விடத்திலேயே மறைந்து விட்டார்.

சிஷ்யர் ஆனந்தர், பகவான் புத்தரிடம், தோன்றி மறைந்த தேவக்குமாரன் யார் என்று கேட்டார்.

"தோன்றி மறைந்த தேவக்குமாரன் வேறு யாருமல்ல. அவர்தான் அனாத பிண்டகர். அவர் தற்போது தேவலோகத்தில் பிறந்துள்ளார்." என்று பகவான் புத்தர் கூறினார்.

அறநெறியில் ஒழுகி, உள்ளத்தில் பக்தி கொண்டு, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்து வாழ்ந்த அனாத பிண்டகர், இறந்த பின் தெய்வலோகத்தில் பிறந்து, மனிதர்களின் நன்மையைக் கருதி, மீண்டும் இவ்வுலகத்திற்குத் தேவக்குமாரனாகத் தோன்றி, நாமும் தேவலோகம் போவதற்கு வழி எதுவெனக் கூறிச் சென்றார்.

ஆகவே, நாம், பகவான் புத்தரும், திருவள்ளுவரும், குருநானக்கும் மற்றும் இறைவன் அருளால் உலகத்திற்கு உபதேசம் செய்த பெரியோர்களும் கூறிய அறநெறியில் ஒழுகி, உள்ளத்தில் பக்தியை வளர்த்து, நற்பண்புகளுடன் நற்செயல்கள் செய்து வாழ்ந்தோமென்றால், அனாத பிண்டகரைப் போல் உடலை விட்டு உயிர் பிரிந்தபின் தெய்வலோகச் சிறப்பைப் பெறலாம்.

பகவான் புத்தர் இதனையே இவ்வாறு கூறியுள்ளார்.

***“நற்கருமத்தைச் செய்தவன் உலக வாழ்வில் இன்பமடைகிறான்; அடுத்த உலகிலும் இன்பமுறுகிறான்; இரண்டு உலகிலும் அவனுக்கு இன்பமே; நான் செய்த புண்ணியம்! என்று அவன் இன்பமடைகிறான். பேரின்ப நிலையில் அவன் மேலும் அதிகமாய் இன்புறுகிறான்.***

***"தூர தேசத்தில் நெடுங்காலம் சென்றிருந்தவன் சேமமாகத் திரும்பி வருகையில் சுற்றத்தாரும், நண்பர்களும், அன்பர்களும் அவனைக் களிப்போடு வரவேற்று உபசரிப்பார்கள்."***

***"அவ்வாறே, புண்ணியம் செய்தவன், இவ்வுலகை விட்டு மறு உலகம் செல்லும்போது, அவன் செய்த புண்ணியங்கள் (முன்னதாக அங்கே சென்று), சுற்றத்தார் அன்பன் திரும்பி வருகையில் வரவேற்பதுபோல, அவனை அங்கே வரவேற்கின்றன.”***

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்